### மதவெறி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

# சமத்துவ ஆட்சி தொடர தி.மு.க.கூட்டணியை ஆதரிப்போம்!

## தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்கள் சங்கம் அறிக்கை!

சென்தனை, ஏப்.23-

தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்கள் சங்கம் மற்றும் அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாண வர்கள் சங்கத்தின் மாநில தலைவர் வா.ரங்கநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்து ஆன்மிக நம்பிக் கையை மூலதனமாக்கி, அதிகா ரத்தை பிடித்த பாஜ இந்நாட்டின் பெரும்பான்மையான இந்து மக்களின் வாழ்வாதாரத்தை அழித்தது. ஆனால், மக்களுக்கு சமத்துவ உணர்வு, சுயமரி யாதை உணர்வை ஊட்டி, மக்கள் வாழ்வில் மட்டுமில்லாமல் தெய்வத்திருக்கோயில்களிலும் சமத்துவத்தையும் சமூக நீதியையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிலைநாட்டி யுள்ளார்.

திராவிடத் தமிழர் தன்மான ஆட்சியின் மிக முக்கியமான சமூக நீதித் திட்டம் ஆலயங்களில் அனைவரும் சமம் என் பதை நடைமுறைப்படுத்தியது. இதற்கான சட்டத்தை 1972ல் கலைஞர் கொண்டுவந்தார். அப்போது சில வஞ்சக கூட்டத் தினர், நீதிமன்ற படியேறி சதி செய்து அனைத்து சாதி அர்ச்சகர் நியமனத்தை தடுத்தனர். 2006-09 ஆண்டுகளில் பயிற்சி பெற்ற அர்ச்சக மாணவர்கள் தாயற்ற பிள்ளைகள் போல நின்றபோது, தாயுமானவராக அரவணைத்தவர் கலைஞர். அவரின் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும் கருவறையில் சாதி பேதத்தையும், பாலின பேதத்தையும் ஒழித்து, சமத்துவ ஆன்மிகத்தை கட்டி எழுப்ப போராடி வருகிறார். அவர் பக்கம் நாங்கள் நிற்கின்றோம்.

2021, ஆக.14ல் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத் தில் பார்ப்பனர்கள் அல்லாத அர்ச்சகர் மாணவர்களை முதல்வர் நியமித்தார். இதுதொடர்பாக உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்திலும் நூற்றுக்கணக்கான வழக்குகளை தொடர்ச்சியாக பாஜ, ஆர்எஸ்எஸ் அமைப்பினர் தொடர்ந்து வழக்கு தொடுத்து வருகின்றனர். இதை தமிழக முதல்வர் தொடர்ந்து எதிர்த்து போராடி வருகிறார். அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுத்தும், அச்சுறுத்தியும், சமூக வலைத்தளங்களில் அவதூறுகளை பரப்புவோர் மீதும் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

தமிழ்நாட்டில் 2007-08ல் 207 மாணவர்கள் பயிற்சி முடித்திருந்தனர். தொடர்ந்து, அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் 2022-23ல் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்ததும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு 94 பேர், குறிப்பாக மூன்று மாணவிகள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு ஓராண்டு அர்ச்சகர் படிப்பை, முடித்து சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.தற்போது, 2023-2024ல் தேர்வான 111 மாணவர்கள், 2024-2025ல் 96 மாணவர்கள், 2025-2026ல் 100 மாணவர்கள் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயின்று வருகின்றனர். தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலில் இந்து சமய அறநிலையத்துறை கருசுமக்கும் பெண்கள் கருவறைக்குள் என்ற முழக்கத்தை முன்வைத்து பணி செய்து வருகிறது. வரும் சட்டமன்றத் தேர்தலில் சமத்துவ ஆன்மிக ஆட்சி தொடர திமுக கூட்டணிக்கு அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று எங்கள் சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம். பாசிசத்தை வீழ்த்த, மதவெறி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, பாஜ ஆட்சியை வீழ்த்தும் ஜனநாயக போர்க்களம் காண்பது, நம் ஒவ்வொருவரின் மாபெரும் ஜனநாயகக் கடமை. இப்போர்க் களத்தில் கண்ணனாக நின்று, மு.க.ஸ்டாலின் எல்லோரை யும் வழி நடத்திச் செல்கிறார். இது தமிழகத்திற்கே பெருமை சேர்ப்பதாகும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### சிங்கப்பூர் கவிஞர்

# புதுமைத் தேனீ மா.அன்பழகன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஏப். 23 -

சிங்கப்பூர் கவிஞர் புது மைத் தேனீ மா.அன்பழகன் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி விடுத்துள்ளார்:

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

சிங்கப்பூர் கவிஞர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

மா.அன்பழகன் அவர்கள், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் மூன்று முறை உறுப்பினராக இருந்த ‘மா.மீ’ என்றழைக் கப்படும் நினைவில் வாழும் மா.மீனாட்சி சுந்தரம் அவர்களின் அன்புத் தம்பியும், தற்போதைய வேதாரண்யம் வேட்பாளர் தம்பி புகழேந்தி அவர்களின் சிற்றப்பாவும் ஆவார்.

கழக இலக்கிய அணியின் மாநிலப் பொருளாளராக ஆறு ஆண்டுகள் பணி யாற்றிய அவர், பின்னர் கடந்த 32 ஆண்டுகளாக சிங்கப்பூரில் வாழ்ந்து வந்ததோடு, சிங்கப்பூரின் கவிமாலை அமைப்பின் காப்பாளராகவும் செயலாற்றி இலக்கியப் பணிகளைக் கவனித்து வந்தார்.

அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும் சிங்கப்பூர் இலக்கியக் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### சட்டப்பேரவைத் தேர்தல்: ஒரே கட்டமாக வாக்குப்பதிவு!

# சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதல்!

## விமானக் கட்டணம் 4 மடங்கு உயர்வு!

*சென்னை, ஏப்.23-*

*தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, 234 தொகுதிகளிலும் இன்று (23ம் தேதி) ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்களிக்க வசதியாக அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கு பொது விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் தென்மாவட்ட மக்கள், தங்களின் வாக்குகளைப் பதிவு செய்வதற்காக, நேற்றிரவு முதல் கார், பேருந்து, ரயில்களில் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டு சென்று கொண்டிருக்கின்றனர். இதில் பலபேருக்கு ரயில் மற்றும் பேருந்துகளில் முன்பதிவு டிக்கெட் கிடைக்காததால், விமானங்களில் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.*

*சென்னை விமான நிலையத்தில் இருந்து தமிழ்நாட்டின் தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை, சேலம் செல்லும் விமானங்களில் இன்று அதிகாலை முதல் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேற்கண்ட ஊர்களுக்கு செல்லும் பல்வேறு விமானங்களில் பலருக்கு டிக்கெட்டுகள் கிடைக்கவில்லை. இதனால் ஒருசில விமானங்களில் இருக்கும் சொற்ப விமான டிக்கெட்டுகளுக்கு பயணிகளிடையே பலத்த போட்டி நிலவி வருகிறது. இதையடுத்து, அந்த விமான டிக்கெட்டுகளுக்கான கட்டணங்கள் கிடுகிடுவென பலமடங்கு அதிகரித்து வருகிறது. இதனால் டிக்கெட்டுக்காக காத்திருக்கும் ஏராளமான பயணிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.*

*சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு வழக்கமான கட்டணம் ரூ.5,354. இன்றைய கட்டணம் ரூ.17,527. பெங்களூர் வழியாக தூத்துக்குடிக்கு செல்ல கட்டணம் ரூ.17,716. சென்னையில் இருந்து மதுரைக்கு வழக்கமான கட்டணம் ரூ.6,670. இன்று வசூலிக்கப்படும் கட்டணம் ரூ.13,320. பெங்களூர் வழியாக மதுரைக்கு செல்ல ரூ.29,397 செலுத்த வேண்டும். சென்னையில் இருந்து திருச்சிக்கு வழக்கமான கட்டணம் ரூ.3,677. இன்றைய கட்டணம் ரூ.14,237. சென்னையில் இருந்து கோவைக்கு வழக்கமான கட்டணம் ரூ.4,634. இன்று ரூ.16,339. சென்னையில் இருந்து சேலத்துக்கு வழக்கமான கட்டணம் ரூ.3,319. இன்று ரூ.12,027 என்று கூறப்படுகிறது.*

### ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டு இருக்கும் நிலையில்

# ஈரான்-அமெரிக்கா போர் நிறுத்தம் காலவரையறையின்றி நீட்டிப்பு!

## டிரம்ப் முடிவு!

*வாஷிங்டன், ஏப். 23-*

*ஈரான்-அமெரிக்கா இடையிலான போர் நிறுத்தத்தை காலவரையறையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். ஈரான் மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கு இடையே கடந்த சில வாரங்களாக போர் பதற்றம் உச்சத்தை எட்டியிருந்தது. இதனைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே 14 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காலம் இன்றுடன் (இந்திய நேரப்படி நாளை காலை 7 மணி வரை) நிறைவடைய இருந்த நிலையில், உலக நாடுகள் பெரும் எதிர்பார்ப்பில் இருந்தன. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் அமைதி பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிடப்பட்ட போதிலும், அதில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை.*

*இந்நிலையில், இன்று போர் நிறுத்தத்தை காலவரையறையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் மற்றும் பீல்டு மார்ஷல் அசிம் முனீர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஈரான் தரப்பில் இருந்து முறையான மற்றும் ஒருங்கிணைந்த நீண்டகால திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரை இந்த போர் நிறுத்தம் தொடரும் என டிரம்ப் தெரிவித்துள்ளார். ஈரானின் ஆளும் தரப்பினர் இடையே பெரும் பிளவு ஏற்பட்டுள்ளதால், அவர்களால் ஒருமித்த முடிவை எடுக்க முடியவில்லை என்றும் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.*

*போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டாலும், ஈரானின் துறைமுகங்கள் மீதான அமெரிக்காவின் கடற்படை முற்றுகை தொடர்ந்து அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்த அமெரிக்க ராணுவம் தயார் நிலையில் இருக்கவும் டிரம்ப் அறிவுறுத்தியுள்ளார். இதற்கிடையில், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தலைமையிலான குழுவினர் இஸ்லாமாபாத் செல்லவிருந்த பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. ‘டூஸ்கா’ என்ற ஈரானிய சரக்கு கப்பலை அமெரிக்கா சிறைபிடித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஈரான் பேச்சுவார்த்தையில் பங்கேற்க மறுத்ததால் இந்த இழுபறி நீடிக்கிறது.*

*அமெரிக்காவின் இந்த போர் நிறுத்த நீட்டிப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள ஈரானின் தலைமை பேச்சுவார்த்தையாளர் முகமது பாகர் காலிபாப்பின் ஆலோசகர், ‘திடீர் தாக்குதல் நடத்துவதற்கு அவகாசம் தேடுவதற்காக, இந்த பேச்சுவார்த்தைக்கான ஏற்பாட்டை அமெரிக்கா செய்து வந்தது. இது அவர்களின் தந்திரமே தவிர வேறொன்றும் இல்லை’ என்று கூறியுள்ளார். ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளதால் சர்வதேச எரிசக்தி சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.*

### சட்டமன்றத் தேர்தல் நடைமுறைகளை

# சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையிடுகின்றனர்!

*சென்னை, ஏப். 23-*

*2026 ஏப்ரல் 20 முதல் 24 வரை நடைபெறவுள்ள சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டத்தில் (International Election Visitors Programme) பங்கேற்க வருமாறு, பல்வேறு நாடுகளின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் தலைவர்கள்/பிரதிநிதிகள் மற்றும் தூதரகத் தலைவர்களுக்குத் தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.*

*இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பூடான், எகிப்து, மொரிஷியஸ், மால்டோவா, இந்தோனேசியா, பெனின், இலங்கை, பெரு, கானா மற்றும் நமீபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தூதரக அதிகாரிகள் உட்பட 20 பிரதிநிதிகள், 2026 தமிழ்நாடு சட்டப் பேரவைப் பொதுத்தேர்தல் நடைமுறைகளைப் பார்வையிட சென்னை வந்தடைந்தனர்.*

*இந்தப் பயணத்தின் போது, பிரதிநிதிகள் நேற்று சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் பொருட்கள் அனுப்பும் மையத்தைப் பார்வையிட்டனர். மேலும், சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் உள்ள மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த தேர்தல் கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் ஊடக கண்காணிப்பு மையங்களையும் அவர்கள் பார்வையிட்டனர். இக்குழுவினர், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அங்கிருந்த குழுவினருடன் கலந்துரையாடினர்.*

*இன்று, ஏப்ரல் 23, 2026அன்று தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்தப் பிரதிநிதிகள் வாக்குச் சாவடிகளுக்கு நேரில் சென்று நேரடி வாக்குப்பதிவு நடைமுறைகளைப் பார்வையிட உள்ளனர். இந்தியாவின் பிரம்மாண்டமான தேர்தல் உள்கட்டமைப்பு, நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் தேர்தல் மேலாண்மையில் புகுத்தப்பட்டுள்ள புதுமைகளை உலகிற்கு அறிமுகப்படுத்துவதே இந்த முன்முயற்சியின் முதன்மை நோக்கமாகும். இதன் மூலம், மாநில தேர்தல் ஆணையம் பின்பற்றும் சிறந்த நடைமுறைகளை சர்வதேச பிரதிநிதிகள் அறிந்துகொள்வதுடன், அவற்றை தங்கள் நாடுகளில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் ஆராய முடியும் என தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.*




இந்தியாவில் நடைபெறும் தேர்தல் நடவடிக்கைகளைப் பார்வையிடுவதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிற்கு வருகைதந்துள்ள சர்வதேச அளவிலான 10 நாடுகளின் பார்வையாளர்கள் நேற்று (22.04.2026) சென்னை சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, என்.கே.டி. தேசிய பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வாக்குப்பதிவிற்குத் தேவையான பொருட்களை, சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு இணைத் தலைமைத் தேர்தல் அலுவலர் (IT) ஸ்ருதஞ்சய் நாராயணன், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, இணைத் தலைமைத் தேர்தல் அலுவலர் (SVEEP) ஆர்.மேனுவல் ராஜ், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி சுகந்தி மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கா.மு. கதிரவன்

**ஏப்ரல் 23 (1995)**



**இளமைக்காலம் முதல் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு நெல்லை மாவட்டத்தில் இயக்கம் வளர்த்தவர்.**

**நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகவும், தமிழக அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.**

**“இஸ்லாமிய சமுதாயத்து இளைஞர் சம்சுதீன்; இந்த இயக்கத்திற்குத் தன்னைக் கதிரவன் என்று அடையாளம் காட்டிக் கொண்டவர். ஒரு முப்பதாண்டு காலத்திற்கு மேலாகத் திராவிட இயக்கத்தின் நன்முத்தாக ஒளிவிட்டு; தமிழக முழுதுமுள்ள கழக உடன்பிறப்புக்களின் இதயங்களில் எல்லாம் இடம்பெற்று; அமைதி நிறைந்த தோற்றத்தினால் – ஆர்ப்பாட்டமற்ற பேச்சினால் – ஆடம்பரமற்ற நடவடிக்கைகளினால் – பழகுவதற்கு இனிய பண்பாளர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.